**வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனி - 2016**

---

வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்களின் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும் என கருதும் கம்பனியின் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகள் தொடர்பாக எனது அவதானிப்புகள் இவ்வறிக்கையில் தரப்பட்டுள்ளன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களிற்காக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 கம்பனியின் ஸ்தாபிப்பு

இந்த கம்பனி, 1979 இன் 23 ஆம் இலக்க, இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டத்துடனான ஒருமைப்பாட்டில் 1999 யூலை 20 இலிருந்து தனியார் கம்பனியொன்றாக 1982 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டதின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் கீழ் 2008 யூன் 16 இல் மீள்பதிவுசெய்யப்பட்டிருந்தது.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் சிறிய மற்றும் நடுத்தரளவு நிறுவனங்களிற்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகள் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகளுக்கான இலங்கை கணக்கீட்டு நியமத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவின் உறுப்புரைகளின் பிரகாரம் ஆறு மாதங்களில் முதிர்ச்சியடைகின்ற ரூபா 6,926,566 தொகையான நிலையான வைப்புக்கள் நடைமுறைச் சொத்துக்களாக குறிப்பிடப்பட வேண்டிய போதிலும், அது நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்களாக குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் கொண்டு செல்லும் பெறுமதி பூச்சியமாகவுள்ள ரூபா 865,700 கிரயமான கணனிகள் மற்றும் கணனி உபகரணம் விற்பனை செய்யப்பட்டிருந்த போதிலும், கணக்குளிலிருந்து அவற்றின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத்தேய்வு பதிவழிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அரச வங்கியொன்றிடமிருந்து பெறப்பட்ட ரூபா 600,000 தொகையான கடன் 2016 சனவரி 11 இல் தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், ரூபா 14,748 தொகையான கடன் வட்டி மேலும் செலுத்தவேண்டியதாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் வகைகளுக்கு எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

| வகை | பெறுமதி ரூபா. | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| பெறவேண்டிய வருமானம் | 391,154 | மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| பொருட்கள் மற்றும் சேவைகளின் செலுத்த வேண்டிய வரிகள் | 109,498 | வரி கணிப்பீட்டின் பட்டோலைகள் |
| அருவச் சொத்துக்கள் | 29,500 | பெறுமதி உறுதிப்படுத்தலுடன் தொடர்புடைய எழுத்துமூல சான்று |

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்.

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1979 இன் 23 ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகாரசபை அதிகாரச்சட்டம் | |
| (i) 39(1) ஆம் பிரிவு | வரிசை அமைச்சினால் நியமிக்கப்பட்ட அரச பணிப்பாளர்களையும் பங்குதாரர்களினால் நியமிக்கப்பட்ட பங்குதாரர் பணிப்பாளர்களையும் உள்ளடக்கி 07 உறுப்பினர்களைக் கொண்டதாக பணிப்பாளர் சபை காணப்படவேண்டிய போதிலும், தற்போதைய பணிப்பாளர் சபையின் நான்கு எண்ணிக்கையும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (ii) 42(1) ஆம் பிரிவு | இலங்கை மகாவலி அதிகாரசபையின் அதிகாரச்சட்டத்தில் கம்பனியின் மூலதனம் ரூபா 100 ஆன சாதாரண பங்குகளினை கொண்டிருக்க வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், கம்பனியின் கூட்டிணைப்பு கட்டளையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூபா 10 ஆன 10,000,000 பங்குகளினை கொண்டிருந்தது. இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் இலங்கை மகாவலி அதிகாரசபையின் முன்னாள் இரண்டு பணிப்பாளர்களுக்கு முறையே 1500 பங்குகள் மற்றும் 02 பங்குகள் விநியோகிக்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (iii) 45(1) ஆம் பிரிவு | பணிப்பாளர்களில் ஒரு பணிப்பாளர் கம்பனியின் தலைவராக தெரிவுசெய்யப்பட்டு நியமிக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியின் தலைவர் இலங்கை மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டிருந்தார். |

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிசார் விளைவுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 389,210 இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 814,640 இலாபமொன்றினை விளைவித்திருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 425,430 ஆன முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 650,399 தொகையொன்றினால் மீளாய்வாண்டின் ஏனைய வருமானம் அதிகரித்தமை இந்த முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகக் காணப்பட்டது.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதிசார் விளைவுகளை பகுப்பாய்கையில், 2012 ஆம் ஆண்டில் ரூபா 444,164 தொகையாகக் காணப்பட்ட கம்பனியின் தேறிய நட்டம் 2016 ஆம் ஆண்டில் ரூபா 814,640 தொகையான தேறிய இலாபமொன்றாக முன்னேற்றமடைந்திருந்தது. ஊழியர்களின் ஊதியம், நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மற்றும் வருமான வரி என்பனவற்றை மீள சரிப்படுத்திய பின்னர், 2012 ஆம் ஆண்டில் ரூபா 392,550 ஆன தொகையான கம்பனியின் பங்களிப்பு மீளாய்வாண்டில் ரூபா 1,816,432 ஆன தொகையொன்றுக்கு முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

கம்பனியின் கூட்டிணைப்பு கட்டளை உறுப்புரைகளின் பிரகாரம், மண், காணி கட்டமைப்புக்கள், நிலத்தின் அமைப்பு, காணிகளின் பயன்பாடு, ப்ளோரா மற்றும் விலங்குகள், உயிர் பல்வகைமை, இலங்கை மற்றும் நாட்டிற்கு வெளியில் காணி கணக்கெடுப்பின் மூலம் நீரின் தரம், வான்வழிப் புகைப்படம், செயற்கை கோள் புகைப்படம், புவியியல் தகவல் முறைமை, பகுப்பாய்வு, காணி வளங்கள் மதிப்பீடு, காணி பயன்பாட்டின் திட்டமிடல், மண்ணரிப்பு மற்றும் மண் பாதுகாப்பு, ஏவலாட்சிகளின் முகாமைத்துவம், மூலிகைகளின் பயிரிடல் மற்றும் நிலைபேறான பயிரிடல் முறைமைகளுக்கான ஆலோசனைகள், திட்டங்களை தயாரித்தல் மற்றும் பயிற்சி போன்ற சூழல் அளவுருக்களை படமிடல் என்பன கம்பனியின் பிரதான நோக்கங்களாகக் காணப்படுகின்றன. சூழல் அறிக்கைகளினை வழங்குவது நிறுவனத்தின் பிரதான செயற்பாடொன்றாகக் காணப்படுவதுடன், மேற்கொள்ளப்பட்ட செயற்பாட்டிற்கு நிறுவனத்தினால் பெறப்பட்ட பணத்தினை வருமானமொன்றாக கணக்கிற்கு கொண்டு வருவதும், செயற்பாட்டிற்கு வெளித்தரப்பினர்க்கு செலுத்தப்பட்ட தொகையினை செலவினமாக கணக்கிற்கு கொண்டு வருவதும் நிறுவனத்தின் கொள்கையாகக் காணப்படுகின்றது.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொழில்நுட்ப அறிவுடனான பதவியணியினரொன்றினை கொண்டிருக்காமையினால் கம்பனியின் அறிக்கைகளின் துல்லியத்தினை சான்றுறுதிப்படுத்துவதற்குரிய இயலுமையொன்றை கம்பனி கொண்டிருக்கவில்லை.

(ஆ) காணியொன்றில் மரங்களின் அகற்றலுடன் தொடர்புடைய சுற்றுச்சூழல் மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரித்தல் மாத்திரம் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) கம்பனியின் ஸ்தாபிப்பிலிருந்து 17 வருடங்கள் கடந்திருந்த போதிலும், கம்பனியின் கூட்டிணைக்கப்பட்ட கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட கம்பனியின் நோக்கங்களினை அடைவதற்கு செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான கண்டியிலுள்ள கட்டிடமொன்றில் இரண்டு தரப்பினர்களுக்கிடையே உடன்படிக்கையொன்று ஏற்படுத்தப்படாது கம்பனியின் அலுவலகம் பராமரிக்கப்பட்டிருந்ததுடன் மாதாந்த வாடகையினை தீர்மானிப்பதற்கு எவ்வித தொடக்க ஆவணங்களும் காணப்படாதிருந்த போதிலும் இது தொடர்பில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செலுத்த வேண்டிய வாடகையாக ரூபா 600,000 தொகையொன்று கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருந்தது. பின்னர் மீளாய்வாண்டில் இந்த செலுத்தவேண்டிய தொகை பதிவழிக்கப்பட்டிருந்ததுடன் ஏனைய வருமானமாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

## 4.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

கணக்காய்வின் கணிப்பீடுகளின் பிரகாரம், மீளாய்வாண்டில் ஏற்பட்ட நடைமுறைச் செலவினங்களுக்கு ரூபா 1,532,265 பெறுமதியான இரண்டு நிலையான சொத்துக்கள் முதிர்வுக்கு முன்னர் காசாக்கப்பட்டிருந்தமையால் அந்த இரண்டு நிலையான வைப்புக்களிலிருந்து பெறப்படக்கூடிய ரூபா 70,574 ஆன வட்டி வருமானமொன்று பறிமுதல் செய்யப்பட்டிருந்தது.

## 4.4 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பிரத்தியேகமான பதவியணியினர் ஒன்றிற்கான அங்கீகாரம் மற்றும் அதனுடன் தொடர்புடைய திட்டமொன்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அல்லது பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்டிருக்காததுடன் கம்பனியின் தற்போதைய பதவியணியினர் 03 நபர்களினைக் கொண்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் ஒப்பந்த அடிப்படையில் கணக்காளர் பதவிக்கு பெண் உத்தியோகத்தரொருவர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த போதிலும், விளம்பரமொன்று பிரசுரிக்கப்பட்டிருக்காததுடன் இது தொடர்பில் முறையானதொரு நேர்முகப் பரீட்சையும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2007 ஆம் ஆண்டிலிருந்து கம்பனியின் முகாமையாளராக பதில் உத்தியோகத்தரின் சேவையும் 2014 ஒக்தோபர் இல் அமைய அடிப்படையில் கணக்குகள் உதவியாளர் பதவிக்கு பெண் உத்தியோகத்தரின் சேவை ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதுடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து 2017 மே 19 வரை ஒப்படை அடிப்படையில் தொடர்ச்சியாக நீடிப்பு செய்யப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடனான வருடாந்த வரைபு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் 2017 பெப்ரவரி 02 இல் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட பல்வேறு கணக்கீட்டு வழுக்களினை சரிப்படுத்துவதன் மூலம் திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2017 யூன் 29 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 இன் பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் இலக்க மற்றும் 5.1.3 ஆம் இலக்க பிரிவுகளின் பிரகாரம் நிதியாண்டிற்கு ஆரம்பிப்பதற்கு முன்னர் 15 நாட்களுக்கு முன்னர் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் வரிசை அமைச்சு, திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டுடன் தொடர்புடைய கூட்டிணைந்த திட்டமொன்றேனும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டில், கம்பனியின் செயற்பாடுகளினை வினைத்திறனாக கண்காணிப்பதற்கு வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரமும் பெறப்பட்டிருக்கவில்லை.

### 5.4 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கு பாதீடொன்று தயாரிக்கப்பட்டிருக்காமையினால் பாதிடப்பட்ட தகவல்கள் மற்றும் உள்ளபடியான தகவல்களை ஒப்பிடமுடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் | அவதானிப்புகள் |
| --- | --- |
| (அ) பணியாளர்கள் நிர்வாகம் | பிரத்தியேகமான பதவியணியினர் மற்றும் கம்பனியின் ஆட்சேர்ப்புத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருக்காமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீடு தயாரிக்கப்பட்டிருக்காமை. |